| மாகாணக் கல்வித் திணைக்களம் வடக்குமாகாணம் Provincial Department of Education – Northern Province | | |
|---|---|---|
| இரண்டாம் தவணைப்பரீட்சை 2022 | | |
| தரம் :- 11 | தொடர்பாடலும் ஊடகக் கற்கையும் I Communication and Media Studies I | நேரம் : 1மணித்தியாலம் |
| சுட்டெண்:............................... | 87 T I | |

**கவனிக்க:**

- ❖ **எல்லாவினாக்களுக்கும் விடை எழுதுக.**
- ❖ **1 தொடக்கம் 40 வரையுள்ள வினாக்கள் ஒவ்வொன்றிலும் (1(, (2), (3), (4), என இலக்கமிடப்பட்ட விடைகளில் சரியான அல்லது மிகப் பொருத்தமான விடையைத் தெரிவு செய்க.**
- ❖ **உங்களுக்கு வழங்கப்பட்ட விடைத்தாளில் ஒவ்வொரு வினாவுக்கும் உரிய வட்டங்களில் உமது விடையின் இலக்கத்தை ஒத்த வட்டத்தினுள்ளே புள்ளடியை (X) இடுக.**

1. "புகையிரதத்தின் ஜன்னல் வழியாகத் தொலைவில் தோன்றும் மலைத்தொடர்பன் அழகானவை. அதன் மூலம் மனதிற்கு உற்சாகம் ஏற்படும்" இக்கூற்று தொடர்புறுவது,
   1. ஆளுள் தொடர்பாடலுடனாகும் 2. ஆளிடைத் தொடர்பாடலுடனாகும்
   3. குழுத் தொடர்பாடலுடனாகும். 4. வெகுசனத் தொடர்பாடலுடனாகும்.
2. இலங்கையின் முதலாவது செய்திப் பத்திரிகையாக அமைவது,
   1. லங்காலோகய ஆகும் 2. கொழும்பு ஜேர்னல் ஆகும்
   3. உதயதாரகை ஆகும் 4. சிலோன் கவர்மென்ட் கெசட் ஆகும்
3. வன்செய்திகள் பெரும்பாலும் காணக்கிடைப்பது செய்திப்பத்திரிகையில்
   1. முதற் பக்கத்திலாகும் 2. நடுப்பக்கத்திலாகும்
   3. இறுதிப் பக்கத்திலாகும் 4. தெரிவு செய்யப்பட்ட பக்கத்திலாகும்
4. பாடசாலையின் விழா(Concert) தொடர்பில் கிராம மக்களுக்குத் தகவல் வழங்க மிகவும் பொருத்தமான குழுத் தொடர்பாடல் முறை
   1. தனிப்பட்ட கடிதங்கள் மூலம் தகவல் வழங்குதல்
   2. அன்றாடம் செய்திப் பத்திரிகையில் விளம்பரம் ஒன்றைப் பிரசுரித்தல்
   3. வீடுவீடாகச் சென்று கையேடுகளைப் பகிர்ந்தளித்தல்
   4. ஒலிபெருக்கி பொருத்தப்பட்ட நடமாடும் வாகனமொன்றைப் பயன்படுத்தல்.
5. வானொலி ஊடகத்தின் பலவீனமாக அமைவது
   1. நேரடி ஊடகமாகக் காணப்படல்
   2. உடனடியாகக் கேட்போருடன் தொடர்புகொள்ளும் ஊடகமாகக் காணப்படல்
   3. புவியியல் தடைகள் இழிவளவாகக் காணப்படல்
   4. ஒலியை அடிப்படையாகக் கொண்ட ஊடகமாகக் காணப்படல்
6. பின்வருவோருள் தொடர்பாடல் பற்றிய கணித மாதிரியை முன்வைப்பதில் பங்காற்றியவர் யார்?
   1. எட்வர்ட் ஹாபர் 2. வொரன் வீவர் 3. ஹியூ க்ளிபர்ட் 4. ஹரோல்ட் டி லாஸ்வெல்

7. வாய்மொழியல்லாத் தொடர்பாடலுக்கு உதாரணமாக அமைவது
   1. பாடலொன்றைப் பாடுதல்
   2. மதப் போதனையொன்றை நடாத்துதல்
   3. செய்திப் பத்திரிகையொன்றின் தலைப்புச் செய்தி
   4. அரிச்சுவடியில் எழுத்துக்களை வாசித்தல்
8. செய்தி அறிக்கையிடல் தொடர்பான சந்தர்ப்பத்தில் முழுமையான சாராம்சம் உள்ளடக்கப்படுவது அதன்
   1) உடலில் 2. முதற் பந்தியில் 3. இறுதியில் 4. தலைப்புச் செய்தியில்
9. வானொலி ஊடகத்தில் 'ஒருமுறை மாத்திரம் செவிமடுக்கக் கூடியது' என்னும் பலவீனத்தைத் தவிர்த்துக் கொள்ள பிரதி எழுதும்போதான பணியில் பொருத்தமற்ற செயற்பாடாக அமைவது
   1. வசன முடிவின் போது நிறுத்தற் குறிகளை இடுதல்
   2. தொழினுட்ப அறிவுறுத்தல்களைப் பிரதியில் சேர்த்தல்
   3. தொழினுட்ப மொழியினைப் பயன்படுத்தல்
   4. சுருக்கக் குறியீடுகள் பயன்படுத்துவதைத் தவிர்த்தல்
10. ஒருவரை மையமாக்கக்கொண்டு பலருக்குத்தகவல் பரவிச்செல்லும் முறைசார்தொடர்பாடல்மாதிரி எது?
   1. வட்ட மாதிரி 2. சங்கிலி மாதிரி 3. Y மாதிரி 4. சக்கர மாதிரி
11. இலங்கை ரூபவாஹினிக் கூட்டுத்தாபனம் எத்தனையாம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்டது?
   1. 1976 2. 1979 3. 1980 4. 1982
12. செய்திப் பத்திரிகையின் உள்ளடக்கத்தின் பிரதான பகுதிகளாக அமைவன,
   1. செய்தி, சிறப்புக் கட்டுரைகள், விளம்பரங்கள் என்பனவாகும்.
   2. செய்தி, ஆசிரியர் தலையங்கம், புகைப்படங்கள் என்பனவாகும்
   3. செய்தி, கேலிச்சித்திரம், விளம்பரங்கள் என்பனவாகும்
   4. செய்தி, பத்தி எழுத்து, கேலிச்சித்திரம் என்பனவாகும்
13. நீங்கள் நூலகத்திலுள்ள வாசிப்பு மண்டபத்தில் நூலொன்றை வாசித்துக் கொண்டிருக்கும் போது, ஓசை மௌனிக்கப்பட்ட (Silent mode) உங்களது கைத்தொலைபேசிக்கு நெருக்கமான ஒருவரிடம் இருந்து அழைப்பொன்று வருகிறது. இச்சந்தர்ப்பத்தில் மிகவும் பொருத்தமான துலங்கலாக அமைய வேண்டியது,
   1. அழைப்பை அப்பொழுதே பெற்றுக் கொள்ளுதல்
   2. அழைப்பைப் பெற்றுக் கொள்ளாது துண்டித்தல்
   3. அழைப்பைப் பெற்றுக்கொண்டு வேலைப்பளு எனக் கூறுதல்
   4. அழைப்பைப் பெற்றுக் கொள்ள வாசிப்பு மண்டபத்திலிருந்து வெளியே செல்லுதல்
14. துல்லியத்தன்மை + நடுநிலைத் தன்மை + தெளிவான தன்மை = நம்பகத்தன்மை
   செய்தி அறிக்கையிடல் தொடர்பான மேற்படி சமன்பாட்டினை முன்வைத்தவர்
   1. சார்ள்ஸ் டானா ஆவார் 2. போல் டி மெசுனியர் ஆவார்
   3. மில்டன் புஷ் ஆவார் 4. கேப்ரியேல் ஸ்கேத் ஆவார்
15. 'ஊடு கடத்தித் தாள்' பயன்படுத்தக்கூடிய எறிவை உபகரணமாக அமைவது.
   1. மேந்தலை எறிவை ஆகும் 2. பல்லூடக எறிவை ஆகும்
   3. வழுக்கி எறிவை / பட எறிவை ஆகும் 4. ஊடாடுகைப் பலகை ஆகும்.

16. ‘அச்சுக் கடிதம்’ ஒன்றை அவ்விதமாகவே வெளிநாடொன்றுக்குத் துரிதமாக அனுப்பக்மூடிய விதி முறையாக அமைவது

1. தொலைநகல் கருவி மூலமாக
2. மின்னஞ்சல் மூலமாக
3. கடிதம் மூலமாக
4. கைத்தொலைபேசி மூலமாக

17. நினைவு மீட்டலை அடிப்படையாகக் கொண்ட மிகப் புராதனத் தொடர்பாடல்

1. மேளச்சப்தம்
2. தீ மூட்டுதல்
3. குகை ஓவியங்கள்
4. மரக்கிளைகளைத் தொங்கவிடுதல்

18. எவ்வகையான செய்தி தலைகீழ் பிரமிட் வடிவத்தில் அறிக்கையிட மிகப் பொருத்தமானது?

1. வன் செய்தி
2. மென்செய்தி
3. உணர்வுபூர்வமான செய்தி
4. தற்போது கிடைத்த செய்தி (Breaking News)

19. 20ஆம் நூற்றாண்டின் ஆரம்பக் கட்டத்தில் இலங்கையில் பத்திரிகை ஆசிரியரொருவரே அதன் உரிமையாளராகவும் அமைந்திருந்த செய்திப்பத்திரிகை

1. லக்மினி செய்திப்பத்திரிகை
2. ஞானார்த்த பிரதீபாய
3. சிங்கள பௌத்தய
4. தினமின

20. இலங்கையில் எழுத்து அச்சுப்பதிப்பு (Letter Press Printing) முறையைப் பயன்படுத்தி அச்சிடப்பட்ட முதலாவது புத்தகம் எது?

1. இலத்தீன் இலக்கணம் (Latin Grammar)
2. இலத்தீன் பைபிள்( Latin Bible)
3. லன்தேசி அல்லது டச்சு ஆராதனைப் புத்தகம் (Dutch Prayer Book)
4. கொழும்பு ஜேர்னல் (Colombo Journal)

21. ‘கூச்சலிடுதல்’ பற்றிய **தவறான** விளக்கம் எது?

1. அது பல்வேறு அர்த்தங்களுடையது
2. அது குறியீட்டுத் தன்மையானது
3. அது வாய்மொழித் தொடர்பாடலாகும்.
4. அது எல்லைகள் கடந்ததாகும்.

22. ‘ஒரு நாய் மனிதனைக் கடிக்கும்போது அது செய்தி அல்ல. ஆனால், ஒரு மனிதன் நாயைக் கடிக்கும் போது அது செய்தியாகும்’ இது முன்வைக்கப்பட்டது,

1. போல் டீ மெஸ்னியரினால் ஆகும்.
2. மில்ட்டன் பிரஷ்ஷினால் ஆகும்.
. சார்ள்ஸ் அண்டர்ஸன் டாவினால் ஆகும்.
4. கப்ரியல் ஸ்கேத்தினால் ஆகும்.

23. தனிமைப்படுத்தல் ஊரடங்கு ஒருமுறை நீக்கப்பட்டதும், ராஜா கடையை நோக்கிச் சென்றான். அவன் தனக்கு முன்னால் பொலிஸ் அதிகாரிகளைக் கண்டதும், முகக்கவசத்தை உடனடியாக அணிந்து கொண்டான். இந்த நடத்தைக்கு அடிப்படையாக அமையும் தொடர்பாடல் வகை,

1. வாய்மொழிசாரத் தொடர்பாடல் ஆகும்.
2. ஆளுள் தொடர்பாடல் ஆகும்.
3. காட்சி வழித் தொடர்பாடல் ஆகும்.
4. ஆளிடைத் தொடர்பாடல் ஆகும்.

24. லாஸ்வெல்லின் வரைவிலக்கணத்தின்படி, தொடர்பாடலின் முக்கிய உறுப்புக்களாவன,

1. தொடர்பாடல் செய்பவர், செய்தி, ஊடகம், பெறுநர் மற்றும் தாக்கம்
2. தொடர்பாடல் செய்பவர், செய்தி, ஊடகம், பெறுநர் மற்றும் பின்னூட்டம்
3. செய்தி, ஊடுகடத்துதல், பெறுநர், சேருமிடம் மற்றும் அனுபவக்களம்
4. தொடர்பாடல் செய்பவர், செய்தி, இரைச்சல், பெறுநர் மற்றும் சேருமிடம்

25. ஒரு தனிநபரை மையமாகக் கொண்டு பலருக்கும் செய்திகளை விநியோகிப்பதற்குப் பயன்படும் முறைசார் தொடர்பாடல் மாதிரி

1. வட்டவடிவ மாதிரி
2. சங்கிலி மாதிரி
3. ‘Y’மாதிரி
4. சக்கர மாதிரி

26. ஒரு குறிப்பிட்ட தகவலானது உயர்நிலை அங்கீகாரத்தைப் பெறுவதற்கு அவசியம் உள்வாங்கப்பட வேண்டிய அம்சங்களாவன,

1. துல்லியம், நடுநிலை, தெளிவு மற்றும் படைப்பாக்கம்
2. துல்லியம், நடுநிலை, உடனடித்தன்மை மற்றும் தொடர்புபடுதல்
3. துல்லியம், நடுநிலை, தெளிவு மற்றும் நம்பகத்தன்மை
4. தொடர்புபடுதல், அண்மித்த தன்மை, காலத்தோடு இயைந்திருத்தல், முக்கியத்துவம்

27. புலக்காட்சி தடைப்படுவது செய்தியானது

1. பெறுநர்மையத் தகவல்களைக் கொண்டிப்பதால் ஆகும்.
2. தனியே ஒரேயொரு அர்த்தத்தைக் கொண்டிருப்பதால் ஆகும்.
3. வெகுசனஊடகங்கள் வழியாகமாத்திரம் முன்வைக்கப்படும் தகவல்களைக்கொண்டிருப்பதால் ஆகும்.
4. அனுபவக் களத்துடன் பொருந்தியிராத தகவல்களைக் கொண்டிருப்பதால் ஆகும்.

28 புகைப்படமெடுத்தலில் படைப்பாக்கத்திற்காகப் படச்சட்டகமொன்றில் பொருட்கள் பொருத்தமாக அமைப்பொழுங்கு செய்யப்படுவது,

1. உருவகப்படுத்தல் அல்லது ஒருங்கிசைத்தல் (Composition) ஆகும்.
2. குவியப்படுத்துதல் (focusing) ஆகும்.
3. ஒளி அளவு (exposure) ஆகும்.
4. காட்சிப்புல ஆழம் (Depth of field) ஆகும்.

29. இணையத்தில் ஒரு தேடும் பொறி

1. முகநூல் (Face book)
2. கீச்சகம் (Twitter)
3. யாகூ (Yahoo)
4. லிங்டின் (Linkedin)

30. நேரடி அறிக்கையிடல் என்பது

1. உடனடியாக நிகழ்வொன்றை அறிக்கையிடுதல்
2. புலனாய்வு வழியில் அறிக்கையிடுதல்
3. நிகழ்பவற்றை அவ்வாறே அறிக்கையிடுதல்
4. சம்பந்தப்பட்ட தரப்பினர் ஊடாக அறிக்கையிடுதல்

31. இலங்கையில் வானொலி ஒலிபரப்பு தொடர்பில் சரியான கூற்றைத் தெரிவு செய்க.

1. ஸ்தாபகர் ஜோன் லாம்சன் ஆவார்
2. தென்னாசியாவில் முதல் வானொலிச் சேவை
3. பிரிட்டிஷாரால் முன்னெடுக்கப்பட்ட முதல் வானொலிச் சேவை
4. சேர் ஹியு கிளிபோர்ட் முதலாவது பணிப்பாளர் ஆவார்

32. புகைப்படமெடுத்தலில், படல வேக (Film Speed) அளவிடப்பட உதவுவது

1. ISO பெறுமதி ஆகும்.
2. பக்ஸல் (Pixel) அளவு ஆகும்.
3. குவியத்தூரம் (f) பெறுமதி ஆகும்
4. பைட் (Bute) அளவு ஆகும்.

33. செய்திப் புகைப்படமொன்றின் முக்கிய பண்புகளாவன,

1. காலத்திற்கேற்றதாயிருத்தல், மானுட விருப்பு மற்றும் தனிப்பட்ட நிலைநோக்கு
2. அசாதாரணத் தன்மை, முரண்பாடு, பல்வகைமை
3. காலத்திற்கேற்றதாயிருத்தல், பாதிப்பு, தனிப்பட்ட நிலைநோக்கு
4. வெளிப்படைத்தன்மை, அண்மித்த தன்மை,

34. அலுவலகப் பணிக்கு சட்டபூர்வத் தன்மையை வழங்கும் கருவிகளாவன,

1. கணிப்பானும் நாணயக் கணக்கீட்டு இயந்திரமும் ஆகும்.
2. பதவி முத்திரைக் கருவியும் திகதி முத்திரைக் கருவியும் ஆகும்.
3. தபால் முத்திரையிடல் இயந்திரமும் கணிப்பானும் ஆகும்.
4. நாணயக் கணக்கீட்டு இயந்திரமும் தபால் முத்திரையிடல் இயந்திரமும் ஆகும்.

35. செய்திப் பத்திரிகைகள் பற்றிய மிகச் சரியான கூற்றைத் தெரிவு செய்க.
1. பிரதான வருமானம் செய்திப் பத்திரிகை விற்பனையில் தங்கியிருக்கிறது.
2. விளம்பரங்களுக்கான இடம் ஒதுக்கப்பட்டதற்குப் பின்னரே செய்திகளுக்கும் கட்டுரைகளுக்குமான இடம் தீர்மானிக்கப்படுகிறது.
3. விளம்பரத்திற்கான கட்டணம் அதன் அளவில் தங்கியுள்ளது.
4. ஆசிரியர் பீடத்திற்கும் விளம்பரப் பிரிவிற்கும் இடையே நேரடித் தொடர்பு இருப்பதில்லை.

36. கரும்பலகை அல்லது வெண்பலகையைக் கற்பித்தலுக்குரிய உதவுகருவியாகப் பயன்படுத்தும் ஆசிரியரொருவரிடம் எது எதிர்பார்க்கப்படுவதில்லை?
1. பலகையைத் துடைத்துச் சுத்தப்படுத்திய பின்னர் பாடப்பகுதியை ஆரம்பித்தல்
2. பலகையிலுள்ள எழுத்துக்களைப் பார்க்க முடிகின்றதா என மாணவர்களிடம் வினாவுதல்
3. எதிர்காலப் பயன்பாட்டிற்காகப் பலகையில் எழுதியவற்றை அப்படியே விட்டுச் செல்லுதல்
4. எழுத்தின் தெளிவை அதிகரிப்பதற்காக வெவ்வேறு வர்ணங்களைப் பயன்படுத்துதல்

37. வேலையொன்றுக்கான நேர்முகத் தேர்வுக்காக மதுரிக்கா தன்னைத் தயார்ப்படுத்திக் கொண்டிருக்கும் போது அவளது உடையிலும் தோற்றத்திலும் கூடுதல் கவனம் செலுத்தப்பட வேண்டுமென தாயார் அறிவுறுத்தினார். இந்தச் சந்தர்ப்பத்தில், தாயாரின் முக்கிய கவனம் இருந்தது,
1. முறைசார் தொடர்பாடலில் ஆகும்
2. ஆளுள் தொடர்பாடலில் ஆகும்
3. ஆளிடைத் தொடர்பாடலில் ஆகும்
4. வாய்மொழிசாராத் தொடர்பாடலில் ஆகும்.

38. பின்வரும் அம்சங்களில் கவனம் செலுத்துக.
- அறிவிப்பாளர் நிகழ்ச்சியை நடாத்திச் செல்வார்
- வெவ்வேறு அபிப்பிராயங்கள் முன்வைக்கப்படும்
- ஒரு சிலரிடையே சிந்தனைகள் பரிமாறப்படும்

மேற்படி அம்சங்களை உள்ளடக்கிய வானொலி நிகழ்ச்சி வடிவம்
1. நேர்காணல் ஆகும்
2. கலந்துரையாடல் ஆகும்
3. உரையாடல் ஆகும்
4. நேரலை வர்ணனை ஆகும்

39. பின்வருவன வானொலி ஊடகம் பற்றிய சில கூற்றுக்களாகும்
A. அது உடனடி வெளிப்பாட்டுக்கான ஊடகம் ஆகும்.
B. அது வாய்மொழித் தொடர்பாடலை மாத்திரம் பயன்படுத்தும் ஊடகம் ஆகும்
C. அது ஒலியை அடிப்படையாகக் கொண்ட ஊடகம் ஆகும்
மேற்படி தரப்பட்டவற்றில் மிகச் சரியான கூற்றுக்களாவனஈ
1. A மற்றும் B மாத்திரம்
2. A மற்றும் C மாத்திரம்
3. B மற்றும் C மாத்திரம்
4. A, B, C அனைத்தும்

40. செய்திப் பத்திரிகை ஒன்றின் ஆசிரியர் தலையங்கம் உள்ளடக்கியிருப்பது
1. பிரதம ஆசிரியரின் கருத்தியல்
2. உரிமையாளர்கள் கொண்டிருக்கும் அபிப்பிராயம்
3. உரிமையாளர்களாலும் ஆசிரியர் பீடத்தினரதும் பார்வை
4. சமூக உயர்வை நாடும் அபிப்பிராயங்கள்